TNRM010060872023

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம்

**முன்னிலை: திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,**
விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
இராமநாதபுரம்.

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 11-ம் நாள் செவ்வாய்கிழமை
மோ.வா.வி.கோ.தீ.அசல் மனு எண். 236/2023
**CNR No: TNRM01-006087-2023**
****

1) அப்துல்லா, வயது 69/2023, த/பெ.பாலு, கதவு எண் 15/44, மேலத்தெரு, கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

2) ஆய்ஷா, வயது 64/2023, க/பெ.அப்துல்லா, கதவு எண் 15/44, மேலத்தெரு, கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

**..... மனுதார்கள்**

**/எதிர்/**

1) A.R.ஹமீது அலி, வயது 64/2023, த/பெ.அப்துல் ரஷீத், கதவு எண் 4/396, கிழக்குத்தெரு, கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

2) மேலாளர், இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., 2 வது தளம், 82, பிரீத்தம் பிளாஸா, சந்திரா காந்தி நகர், பொன்மேனி, பை-பாஸ் ரோடு, மதுரை - 625 016.

**.... எதிர்மனுதாரர்கள்**

இம்மனு மோட்டார் வாகன விபத்துச் சட்டம்-1988 பிரிவுகள் 140, 141, 142, 163(பி), 166, 182(ஏ)-ன் படியும் உடன் இணைந்த மோட்டார் வாகன கோருரிமை தீர்ப்பாய விதிகள் திருத்தப்பட்ட சட்டம் 54/1994 விதி 3(1)-ன் கீழ் மோட்டார் வாகன விபத்தில் இறந்தவர் சும்சுதீன். அவரின் வாரிசுகளான மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,00,000/- இழப்பீடாக 1 முதல் 2 எதிர்மனுதாரர்களை கொடுக்க உத்தரவிட்டும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாக்கல் தேதியிலிருந்து நீதிமன்றத்தில் இழப்பீடு பணம் செலுத்தும் தேதி

வரை 12% வட்டியுடனும் இம்மனுவிற்கான செலவுத்தொகையையும் சேர்த்து எதிர்மனுதாரர்கள் கொடுக்கும்படி உத்தரவு கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் ரூ.50,00,000/- இழப்பீடாக கோரியுள்ளார். அதற்கு நீதிமன்றக் கட்டணமாக மோட்டார் வாகன இழப்பீடு தீர்ப்பாயம் 1989 ம் ஆண்டு விதி 24(1)ன் கீழ் ரூ.49,372.50/- செலுத்தப்படவேண்டும். ஆனால் மனுதாரரால் ரூ.372.50/- மட்டும் நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.49,000/-க்கு U/s.24(3) M.V.Act ன்படி நீதிமன்ற கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வேண்டி 03.11.2023 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு இ.ம.எண்.1/2023 ஆக இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள்: 18.10.2023.

இம்மனுவானது 11.06.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. முரளிகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.A. தர்மராஜ் அவர்கள் ஆஜராகியும் 1 ம் எதிர்மனுதாரர் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டார். மனுதாரர்கள் அழைக்கப்படும் ஆஜரில்லாத நிலையில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1. இம்மனு மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததால் தள்ளுபடி செய்யப்படுகிறது.
2. செலவுத் தொகை பற்றி உத்தரவு ஏதும் இல்லை.

TNRM010060872023

2024ம் ஆண்டு ஜூன் மாதம் 11ம் நாளான இன்று என்னால் கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் தீர்ப்பாணை உத்தரவு வழங்கப்படுகிறது.

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**

**இராமநாதபுரம்.**

**M.C.O.P.No.236/2023**

**தீர்ப்பாணை உத்தரவு**

**நாள்: 11.06.2024.**